**PEPERIKSAAN PERCUBAAN SPM 2019** **6354/2**
**BAHASA TAMIL**
**தமிழ்மொழி முன்னோட்டத் தேர்வு**
**Kertas 2**
**தாள் 2**
**2 ¼ jam** **Dua jam lima belas minit**

---

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. *Kertas soalan ini mengandungi* ***22*** *soalan.*

2. *Jawab* ***semua*** *soalan.*

3. *Jawapan anda hendaklah ditulis di dalam buku jawapan yang disediakan. Sekiranya buku jawapan tidak cukup, sila dapatkan helaian tambahan daripada pengawas peperiksaan.*

## பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)

**[30 புள்ளி]**

கீழ்க்காணும் **கருத்துப்படத்தைக்** கூர்ந்து கவனித்துத் தொடர்ந்துவரும் வினாவுக்கு விடை எழுதுக.



1. இப்படம் உணர்த்தும் **கருத்து** யாது? [2 புள்ளி]

2. இக்கடிதம் ஆசிரியர்க்கு என்ன உணர்த்த வருகிறது?

அன்புள்ள ஆசிரியருக்கு,

வணக்கம்.

நான் வாரக்கடைசியில் வீட்டுப்பாடம் எழுத விரும்பவில்லை .
அந்த நாள், நான் தொலைக்காட்சி பார்க்கும் நேரம்,
என் நண்பர்களுடன் விளையாடும் நேரம் .
மாணவர்களுக்கு வீட்டுப்பாடம் கொடுப்பதைப் பள்ளிகள் கைவிட வேண்டும்.
பிள்ளைகள் அவர்கள் உலகத்தில் வாழ்வதை இந்த வீட்டுப்பாடம் தடுக்கிறது.
நீங்கள் ஓய்வு நேரத்தில் உங்களுக்கு விருப்பமானதை செய்ய விரும்புவது போலத்தான் நாங்களும் செய்ய விரும்புகிறோம். ஆனால், நீங்கள் கொடுக்கும் வீட்டுப்பாடத்தால் எங்களுக்கு ஓய்வே இருப்பதில்லை. அதனால், குழந்தைப் பருவத்தில் நாங்கள் வாழ வேண்டிய வாழ்க்கையை வாழ முடியாமல் போகிறது. ஓடியாடி விளையாட வேண்டிய நேரத்தில் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கிறோம் ஒரு நோயாளியைப் போல.

இப்படிக்கு,
உங்கள் மாணவன்,
எட்வர்ட் இம்மானுவேல்

[2 புள்ளி]

3. கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் ஆசிரியர் அறிய விரும்பிய **செய்தி** என்ன?

| | |
|---|---|
| ஆசிரியர்: | உன் பெயர் என்ன? |
| மாணவன்: | ராமராஜன், ஐயா |
| ஆசிரியர்: | உன்னை வீட்டில எப்படிக் கூப்பிடுவாங்க? |
| மாணவன்: | பக்கத்துல இருந்தா மெதுவா கூப்பிடுவாங்க. தூரத்துல இருந்த சத்தமா கூப்பிடுவாங்க... |

[2 புள்ளி]

4. கீழ்க்காணும் பாடலில் புலவர் பெற்றோருக்குக் கூறும் **அறிவுரை** இரண்டனை எழுதுக?

தூக்க மருந்தினைப் போன்றவை பெற்றவர்
போற்றும் புகழுரைகள்
நோய் தீர்க்கும் மருந்தினைப்
போன்றவை கற்றவர்
கூறும் அறிவுரைகள்
ஆறு கரையில் அடங்கி நடந்திடில்
காடு வளம் பெறலாம்
தினம் நல்ல நெறிகண்டு பிள்ளை வளர்ந்திடில்
நாடும் நலம் பெறலாம்
பாதை தவறிய கால்கள் விரும்பிய
ஊர் சென்று சேர்வதில்லை
பண்பு தவறிய பிள்ளையைப் பெற்றவர்
பேர்சொல்லி வாழ்வதில்லை

- புலவர் புலமைபித்தன்

[2 புள்ளி]

5. கவிஞர் மைதீ. சுல்தான் **ஆற்றிய தமிழ்ப்பணி** இரண்டனை எழுதுக.

**கவிஞர் மைதீ.சுல்தான்**



கவிஞர் மைதீ. சுல்தான் அவர்கள் பினாங்கில் பிறந்து வளர்ந்தவர். தமிழில் கல்வி கற்ற இவர் தமிழ் மேல் உள்ள தனியாத தாகத்தால் மலேசிய வானொலியில் தமிழ்ப்பிரிவில் அறிவிப்பாளராகப் பணியில் அமர்ந்தார். அவருடைய பேச்சுத் திறமையும் தமிழ் வளமும் ஏராளமான நேயர்களை அவரது இரசிகராக்கியது. பல வீடுகளில் அக்காலத்தில் தொலைக்காட்சி வசதியில்லை. அப்பொழுதெல்லாம் காற்பந்து, பூப்பந்து போன்ற விளையாட்டுகளை மக்கள் இரசிக்கும் வண்ணம் நல்ல தமிழில் நேரடி வருணனை செய்வதில் மன்னனாகத் திகழ்ந்தவர் இவர். அவரது வருணனையைக் கேட்போர் நேரடியாக அவ்விளையாட்டைக் கண்டுகளிக்கும் உணர்வைப் பெற்றனர். மேலும், கண்ணதாசன் நேரம், கவிதை அரங்கம் போன்ற இலக்கியத் தரம் வாய்ந்த நிகச்சிகளைத் தயாரித்து வானொலியில் ஒலிப்பரப்பினார். மேலும், தமிழ் மேடைகளில் கவியரங்கம், சிறுகதை ஆய்வரங்கம் போன்ற நிகழ்ச்சிகளிலும் பங்கு கொண்டு மலேசியத் தமிழ் இலக்கியத்தை வளர்த்தார். அதைத் தவிர்த்து, தன் இலக்கியத் தாகத்தைத் தீர்த்துக் கொள்ள, *மைதீ.சுல்தான் கவிதைகள், கூடிவிட்டோம், ஐம்பது ரிங்கிட் சிறுகதை தொகுப்பு, திடம் கொண்ட திருஞானசம்பந்தர்* போன்ற சில நூல்களை எழுதி வெளியிட்டு, தமிழ் எழுத்துலகிலும் தனித் தடம் பதித்த இவர் 2017 –ஆம் ஆண்டு இப்பூவுலகை நீத்தார்.

[2 புள்ளி]

6. கீழ்க்காணும் பகுதியில் சுரேஷின் வெற்றிக்குக் காரணமாக அமைந்த அவருடைய **பண்புநலன்** இரண்டனை எழுதுக.

**அம்பெய்தும் வீரர் சுரேஷ் செல்வதம்பி**




சுரேஷ் என்ற பெயர் இடம் பெறாத ஊடகம் இல்லை என்று சொல்கிற அளவுக்கு உலகம் முழுமைக்கும் புகழ் பெற்று விளங்குகிறார் நம் நாட்டு அம்பெய்தும் வீரர் சுரேஷ் செல்வதம்பி. இவர் அண்மையில் ஹாலந்தில் நடந்த அம்பெய்தும் போட்டியில் மாற்றுத் திறனாளிகளுக்கான பிரிவில் உலக சாம்பியன் பட்டத்தை வென்று நாடு திரும்பியுள்ளார். இவருக்கு நாட்டுத் தலைவர்களும் மக்களும் கோலாகல வரவேற்பை நல்கியுள்ளனர். ஒரு சாலை விபத்தில் தன் காலை இழந்திருந்தாலும் தன்னால் சாதிக்க முடியும் என்ற எண்ணத்தைத் தன்னுள் வளர்த்துக் கொண்டார் இவர். தமது 18-ஆவது வயதில் இவ்விளையாட்டில் ஈடுபட தொடங்கிய இவர் 2012-ஆம் ஆண்டு சுக்மா போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றார். குடும்பச் சுமையைச் சுமப்பதற்காக வேலைக்குச் செல்ல வேண்டியிருந்ததால் தொடக்கத்தில் இவரால் முழுக் கவனத்தோடு இவ்விளையாட்டில் ஈடுபட இயலவில்லை. இதனால் மியான்மாரிலும் கோலாலம்பூரிலும் நடைபெற்ற ஆசியான் அம்பெய்தும் போட்டிகளில் தன்னால் மிளிர முடியவில்லை என்று கூறும் சுரேஷ் தொடர்ந்து போராடி இவ்வெற்றியை அடைந்ததாகக் கூறுகிறார். நாட்டுக்கும் வீட்டுக்கும் தன்னால் நற்பெயர் கிடைக்க வேண்டும் என்ற உணர்வே தன்னுடைய போராட்டத்திற்குக் காரணம் என்கிறார்.

[2 புள்ளி]

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்டுள்ள பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை காண்க.*

ஒழுக்கமாக வாழ்கின்றவர் மாயாத புகழைப் பெறுகின்றனர். ஒழுக்கத்திற்கு மாறான இழுக்கத்தில் இறங்குபவர் இழிந்த பழிச் சொல்லிற்கு ஆளாகின்றனர். மனிதன், உயிரைக் கொடுத்தாகிலும் புகழைப் பெறுதல் வேண்டும். நம் உயிரினும் சிறந்ததான இந்த ஒழுக்கம் என்பது என்ன? எவருடைய நலனுக்கும் ஊறு விளைவிக்காமல் எல்லோருடனும் இசைந்து வாழ்வதுதான் ஒழுக்கமான, நேர்மையான வாழ்வாகும். பிறருக்குக் கேடு விளைவிக்கும் செயல்கள் அனைத்துமே ஒழுக்கத்திற்கு மாறான செயல்கள் ஆகின்றன. பிறரது பொருளைத் திருடினால் பொருளை இழந்தவருக்குக் கேடு விளைகின்றது. பிறருக்குத் தீங்கு இழைத்தால், தீங்குற்றவர் துன்பப்படுகின்றார். எனவே, திருடுவதும், தீங்கிழைத்தலும் பிறருக்குத் துன்பம் தருகின்றன. பொய் பேசுவதால் பிறர் ஏமாற்றப்படுகின்றனர். புறங்கூறுவதால் பிறர் மனம் புண்படுகின்றது. எனவே, பொய்யுரையும், புறங்கூறலும் இழுக்கத்தின் அடிப்படை என்பது வெள்ளிடைமலையாகும்.

ஒழுக்கம் தவறி நடப்பவர்கள் புகழ் எய்த முடியாது. பழியே அவர்களைச் சேருகின்றது. புகழும் அதற்கு மாறான பழியும் வரக் காரணம் யாவை? பிறர் நம்மைப் பற்றிப் பெருமையாக எண்ணுவதையும் , பேசுவதையும் புகழ் என்கின்றோம். நம்மைக் குறித்து அயலார் இழிவாகப் பேசுவதைப் பழி அல்லது இகழ் என்கிறோம். நம்மில் ஒவ்வொருவரிடமும் உணரும் திறன் உண்டு. எது நல்லது? எது தீயது? என்பதையும், தீமையானதைச் செய்வது கூடாது என்பதையும் நம் உள்ளம் உணர்த்துகிறது. நல்லது எது? தீயது எது? என்பதைக் காட்டி, தீயனவற்றைச் செய்ய வேண்டாம் என்று நம்முள் ஒரு மெல்லிய குரலெழுகின்றதே அதுதான் மனச்சான்று. அது, நம் உள்ளத்துள் நின்று, உயர் நெறியினை உணர்த்தும். மனிதர்கள் அனைவருக்கும் இந்த மனச்சான்று இருக்கின்றது. ஆயினும், அம்மனச்சான்றின் குரலை நாம் பல வேளைகளில் பொருட்படுத்தாமல் விட்டு விடுகின்றோம். அவ்வாறு மனச்சான்றினைப் புறக்கணித்து, அதன் மாண்பினையும் உண்மைத் தன்மையினையும் உணராததால், அதற்கு மாறான செயல்களில் மனிதன் **இறங்கி விடுகிறான்**. இதனால், அவனது வாழ்க்கை மாலுமி இல்லாத கப்பல் போல தத்தளிக்கும் சூழலை ஏற்படுத்தி விடுகிறது.

நம் இதயத்தில் இறைமைதான் நன்மை. தீமைகளைக் காட்டும் உள்ளத்து ஒளியாக ஒளிர்கின்றது. இறைமை என்ற உண்மையொளி, நம் உள்ளத்தில் ஒளிர்வதால்தான் நன்மை எது தீமை எது என்பதை நாம் தெளிவாக உணர்கின்றோம். நம் செயல்களுக்கெல்லாம்

அடிப்படை சிந்தனை தூயதாக இருத்தல் வேண்டும். சமுதாயச் சட்டதிட்டங்கள் நம் செயல்களைத் திருத்தலாம். ஆனால் சிந்தனையைத் திருத்துவது எப்படி? இறையுணர்வு தான் சிந்தனையைத் திருத்துகின்றது.

அகத்திலே எழும் பிழைகள்தாம் பிறகு பிழைச் செயல்களாக உருவெடுக்கின்றன. எனவே, தூய்மையற்ற சிந்தனையே தீமையாகின்றது. நாம் என்ன நினைக்கின்றோம்? நம் மனதிலே நிழலாடும் எண்ணங்களை எவர் அறிவார்? எனவே, அவ்வெண்ணங்கள் தீயவனவாக இருந்தால் என்ன? இவ்வாறு நாம் கருதுகின்றோம். உண்மைதான். தீய எண்ணங்களுக்காக மட்டும் எவரையும் தண்டிக்கும் சட்டம் இல்லை. தீய சிந்தனை தீய செயலாக வெளிப்பட்ட பிறகுதான் சட்டம் செயல்படுகின்றது. ஆனால், ஒழுக்கம் வேறு, சட்டம் வேறு. செயலைத் திருத்துகிறது சட்டம். சிந்தனையைத் திருத்துகிறது ஒழுக்கம். சட்டம் உடலாற் செய்யும் பிழைகளைத் தடுக்கின்றது. ஒழுக்கமோ உள்ளத்தால் செய்யும் பிழைகளைத் தடுக்கின்றது. இறையுணர்வு படைத்தோர் சிந்தனைத் தூய்மையினைச் சிறந்ததெனப் போற்றுவர். சிந்தனைத் தூய்மை, இறைவன் குடிகொண்டுள்ள கோவில்; உயர் எண்ணங்கள் மலரும் சோலை.

7. ஒழுக்கமான வாழ்க்கை எனக் கூறப்படுவது எது ? [2 புள்ளி]

8. (i) சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையே காணப்படும் வேற்றுமையை விளக்குக . [2 புள்ளி]

(ii) 3-வது பத்தியில் ஆசிரியர் **வலியுறுத்தும்** கருத்து யாது?

[2 புள்ளி]

9. கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்கு ஏற்ற பொருள் எழுதுக.
அவ்வாறு மனச்சான்றினைப் புறக்கணித்து, அதன் மாண்பினையும் உண்மைத் தன்மையினையும் உணராததால், அதற்கு மாறான செயல்களில் மனிதன் **இறங்கி விடுகிறான்** [2 புள்ளி]

10. **தம்** பிள்ளைகளிடையே ஒழுக்கம் நிலைத்திருக்க ஒவ்வொரு பெற்றோரும் மேற்கொள்ள வேண்டிய **ஐந்து நடவடிக்கைகளை** 50 சொற்களில் எழுதுக.

[10 புள்ளி]

## பிரிவு ஆ : கருத்துணர்தல் (படைப்பிலக்கியம்)

## [30 புள்ளி]

**கேள்விகள் 11 முதல் 14 வரை**

கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அன்று பொழுது விடிந்ததிலிருந்து மனம் கனமாக இருந்தது. மிகப் பெரிய தவறு ஒன்றைத் தெரிந்தே செய்து விட்டதைப் போல் **மனம் ஓலமிட்டது.** எனக்கு நானே எத்தனையோ முறை ஆறுதல் கூறியும் மனம் அமைதியடையவில்லை.

அன்று மாணவர்களுக்குச் சரியாகப் பாடம் போதிக்க இயலவில்லை. வகுப்பு நேரம் முடிந்ததும் பள்ளி மணி அலறியது. மாணவர்கள் மளமளவென புத்தகங்களை எடுத்துப் பையில் வைத்துவிட்டு "தெரிமா **கா**சே சேகு"(நன்றி) என உரத்த குரலில் **கூறி**விட்டு பரபரப்பாக வெளியேறினர். என் கண்கள் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்தன. ஆனால், என் மனம் மட்டும் 'உங்கள் குரல்' மாத இதழில், கவிஞர் சீனி நைனா முகம்மது எழுதிய கவிதை வரிகளையே மீண்டும் மீண்டும் நினைவுபடுத்தி என்னை நையாண்டி செய்து கொண்டிருந்தது.

'சோறுபோடும் மொழிகளெல்லாம்
சொந்தமொழி ஆகுமா? –உனக்குச்
சோறுமட்டும் போதுமா? – நிலை
மாறும்போது தாயைக்கூட
மாற்றிக்கொள்ள தோன்றுமா? – தன்
மானம் உனக்கு வேண்டுமா?'

அந்த வைர வரிகள் என் இதயத்தைக் கிழித்துக் கொண்டிருந்தன.

"என்ன! மிஸ்டர் செங்கதிர்! மாணவர்கள் எல்லாம் போயிட்டாங்க. நீங்க மட்டும் ஏதோ யோசனையில் இருப்பது போல் தெரிகிறது. என்ன? ஏதும் பிரச்சனையா? உங்க முகமே சரியில்லை!" எனக்கு மிக அருகில் ஒலித்த வளவனின் குரலைக் கேட்டு சற்று அதிர்ச்சி அடைந்தேன்.

“ஒன்னுமில்ல மிஸ்டர் வளவன்! நம்ம பள்ளி**ச்** சீனப்பிள்ளைங்களுக்குச் சரித்திரப் பாடம் போதிப்பது ரொம்ப சிரமமா இருக்கு. மலாயும் புரியல! ஆங்கிலமும் புரியல! எப்படித்தான் பிழைக்கப் போறாங்கன்னு யோசிச்சிக்கிட்டு இருந்ததில் நேரமாகிப் போனதையே மறந்து விட்டேன்!” உண்மை நிலைமையைக் கூற மனமில்லாமல் ஏதோ சமாளித்தேன்.

“அடக்கடவுளே!... இதுக்குப் போயா அலட்டிக்கிறீங்க! மலாய் தெரியலனா என்ன...? ஆங்கிலம் தெரியலனா... என்ன? சீனர்களுக்குத் தங்கள் தாய்மொழி தெரியும். தாய்மொழியை நேசிக்கிற எந்த இனமும் குட்டிச்சுவரா போனதா சரித்திரமே இல்லன்னு உங்களுக்குத் தெரியாதா மிஸ்டர் செங்கதிர்?”

“ஆ..மா..ம்! ஆமாம்ம்...! நீங்க சொல்றது சரிதான்” என்று நா**க்**குழற அவர் கூறியதை ஆமோதித்தேன்.

வளவனும் நானும் ஒத்த வயதுடையவர்கள். பல ஆண்டுகளாக ஒரே பள்ளியில் வேலை பார்க்கின்றோம். அவர் தமிழ்ப்பள்ளியில் படிக்கவில்லை என்றாலும் தன் மூன்று பிள்ளைகளையும் தமிழ்ப்பள்ளியில்தான் படிக்க வைத்தார். ‘அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்’ என்று இளவயதில் தாய்மொழியில் படித்தத**லோ** என்னவோ அவரது பிள்ளைகள் இன்று தங்கள் தாய் தந்தையரை அன்போடு கவனித்து வருகின்றனர்.

“ மிஸ்டர் கதிர்! என்ன மறுபடியும் யோசனை?” என் தோளைக் குலுக்கினார். என்னையும் அறியாமல் என் கண்களில் வழிந்த கண்ணீரைக் கண்டு திடுக்கிட்டார் வளவன்.

“என்ன மிஸ்டர் கதிர்! அழுகிறீர்களா? என்ன நடந்தது?” பதபதைத்துக் கேட்டார் வளவன்.

என்னோட ஒரே மகன் முகிலன். தமிழ் படிச்சா எங்**கே** எதிர்காலம் இல்லாம போயிடுமோன்னும் பயந்து தேசிய பள்ளிக்குப் படிக்க அனுப்பினேன். அவன் ஆங்கிலப் போட்டிகளில் பரிசுகள் வாங்கி**க்** குவித்தபோது பூரித்துப் போனேன். படித்துப் பட்டம் வாங்கும் போதுகூட, நல்ல வேளையா நண்பர்கள் பேச்சைக் கேட்டு தமிழ் படிக்க அனுப்பல என்று எனக்கு நானே பெருமிதப்பட்டுக் கொண்டேன். ஆனா இப்போ...

" ஐயோ!... அவனுக்கு என்னதான் ஆச்சு?" வளவன் அலறினார்.

" மாஸ்டர் பட்டப் படிப்புக்காக ஆஸ்திரேலியா சென்றவன் அங்கேயே ஒரு பணக்கார பெண்ணைத் திருமணம் செய்து கொண்டதாகவும் தான் வாழ்வில் முன்னேற வேண்டுமானால் அப்பெண்ணையும் அவள் குடும்பத்தையும் விட்டு வர முடியாது எனவும்..." மேலும் கூற முடியாமல் என் நா தழுதழுத்தது. நீங்கள் விதைத்த வினைதானே என வளவனின் பார்வை என்னைக் கேட்டதை நான் உணர்ந்தேன். ஆனாலும், அவருடைய கைகள் என் தோளை அன்பாக வருடின.

சோறு மட்டும் போதுமா? மனோன்மணி தேவி

(எடுத்தாளப்பட்டது)

11. கதிர் அன்று வகுப்பில் சரியாகப் போதிக்க முடியாமல் போனதற்கான காரணம் யாது? [2புள்ளி]

12. (அ) இச்சிறுகதையில் வரும் வளவனின் **பண்புநலன்களுள் இரண்டினை** தொடர்புடைய சம்பவத்தோடு குறிப்பிடுக. [4 புள்ளி]

(ஆ) கதிர் பற்றி நீ அறிந்து கொள்வது என்ன? [2 புள்ளி]

13.**'மனம் ஓலமிட்டது'** எனும் சொற்றொடர் உணர்த்தும் சூழலுக்கேற்ற பொருள் யாது? [3 புள்ளி]

14.(அ) இச்சிறுகதை உணர்த்தும் **படிப்பினை இரண்டினை** ஆராய்ந்து எழுதுக. [5 புள்ளி]

(ஆ) இச்சிறுகதையின் வாயிலாக உனக்கு ஏற்பட்ட **உணர்வு** யாது? [4 புள்ளி]

15. கீழே கொடுக்கப்பட்டுள்ள கவிதையை வாசித்து, **உமது சொந்த மொழிநடையில் விளக்கம்** எழுதுக.

உலகம் என்பதோர் பள்ளிக்கூடம் – அதில்
ஒவ்வொரு நாளும் புதுப்பாடம்
சிலருக்கு வீடும் சிறைப்பாடம் – கொடும்
சிறையும் அறிஞனின் கலைக்கூடம்
அன்னையின் மடியில் அன்புப்பாடம் – நல்ல
தந்தையின் வழியில் பண்புப்பாடம்
கண்ணைத் திறந்திடும் கல்விப்பாடம் – வழி
காட்டிடும் ஆசான் சொல்லும்பாடம்

-சீனி நைனா முகம்மது

[10 புள்ளி]

## செய்யுளும் மொழியணியும்
## [20 புள்ளிகள்]

**கேள்விகள் 16 முதல் 19 வரை**

16. கொடுக்கப்பட்டுள்ள இரட்டைக்கிளவியைப் பொருள் விளங்குமாறு வாக்கியத்தில் அமைத்துக் காட்டுக.

| |
|---|
| சரசர |

[2 புள்ளி]

17. கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்திற்கு ஏற்ற திருக்குறளை எழுதுக.

| |
|---|
| இந்தத் தொழிலை இன்னின்ன காரணத்தால் இவன் செய்து முடிக்கத்தக்கவன் என்பதை ஆராய்ந்தறிந்து, அத்தொழிலை அவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும் |

[2 புள்ளி]

18. கீழ்க்காணும் செய்யுளில் கோடிடப்பட்ட வரிகளின் விளக்கத்தை எழுதுக.

> அன்ன மாவே மண்ணொாடு கிளியே
> **<u>இல்லிக் குடமா டெருமை நெய்யரி</u>**
> அன்னர் தலையிடை கடைமா ணாக்கர்

[4 புள்ளி]

19. கீழ்க்காணும் பனுவலில் அடைப்புக்குறிக்குள் இருக்க வேண்டிய பொருத்தமான மொழியணிகளை எழுதுக. பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.

அன்று சோழ மன்னனின் பிறந்தநாள். அரண்மனையின் உள்ளேயும் வெளியேயும் **(I. இணைமொழி)** மக்கள் கூட்டம் அலைமோதியது. மன்னனின் அரண்மனை வெள்ளையடிக்கப்பட்டும் வண்ணம் தீட்டப்பெற்றும் புதுப்பொலிவுடன் திகழ்ந்தது. சூரியனின் வெண்கதிர்கள் மோதியதால் ஜொலித்த பளிங்குச் சுவர்கள் பார்ப்போர் கண்களைக் கூசச் செய்தன. **(II. இரட்டைக் கிளவி)** ஊரே மகிழ்ந்திருந்த அவ்வேளை, ஒரு புலவர் மட்டும் சோர்ந்து காணப்பட்டார். நுண்பொருள் காணும் அறிவு அவருக்கிருந்ததால், அவர் வருந்திய காரணத்தை அவரே கூறினார்.

‘கடந்த மாதம் இந்த அரண்மனைக் கோபுரத்தில் ஒரு சிலந்தி, கூடு கட்டுவதைப் பார்த்தேன். தன் முயற்சியால் வருந்திக் கட்டிய அக்கூட்டிலே அது நிம்மதியாக வாழ்வதையும் கண்டேன். ஆனால் அரசனின் பிறந்தநாளுக்கு அரண்மனையைச் சுத்தம் செய்யும் வேலையாள்கள் அதன் கூட்டை அழித்து விட்டார்கள். எல்லோரும் இங்கு வந்து பொன்னையும் பொருளையும் பெற்று மகிழ்வோடு செல்கின்றனர். ஆனால், அந்தச் சிலந்தி அரசனின் பிறந்த நாளன்று, உள்ளதை இழந்து நிற்கிறதே’, என்று கூறிப் புலம்புகிறார் புலவர். உலகில் உள்ள எல்லா உயிரையும் மனித உயிருக்கு நிகராக மதிக்கும் இத்தகைய புலவர்கள் நமது இலக்கியங்களில் இன்றும் வாழ்ந்து வருகின்றனர். **(III. பழமொழி)**

எனவே, மாணவர்கள் இத்தகைய இலக்கிய நூல்களை விரும்பிக் கற்க முன்வர வேண்டும். அவற்றிலுள்ள நல்ல கருத்துகளைப் பின்பற்ற வேண்டும். இத்தகைய சான்றோர்களின் நூல்களைப் படித்திருப்பின், நம் வாழ்வில் சிக்கல் நேரும்போது அவர்களின் அறிவுரைகள் நமக்கு உறுதுணையாய் வந்து கைகொடுப்பதோடன்றி, நமது வீழ்ச்சியையும் முறியடிக்கும். **(IV. திருக்குறள்)**

## பிரிவு ஈ: இலக்கணம்
## ( 20 புள்ளி )
## கேள்விகள் 20-22 வரை

20. சேர்த்தெழுதுக

i அ) பொன் + தாமரை =

ஆ) விரி + சுடர் =

[2 புள்ளி]

ii கீழ்க்காணும் சொற்குவியலில் முற்றியலுகரச் சொற்களை அடையாளம் கண்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| பண்பு | உதவு | ஆடு | விருது |
| கயிறு | பளு | நடு | சால்பு |
| வாக்கு | | | |

[3 புள்ளி]

iii ஈறுகெட்ட எதிர்மறை பெயரெச்சச் சொற்கள் இரண்டனை எழுதுக.

[2 புள்ளி]

21. கீழ்வரும் தன்வினை வாக்கியத்தைப் பிறவினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

அம்மா குழந்தைக்கு உணவு ஊட்டினார்.

[3 புள்ளி]

22. கீழே கொடிக்கப்பட்டுள்ள பகுதியில் ஐந்து பிழைகளை மட்டும் அடையாளங்கண்டு அவற்றைச் சரிப்படுத்தி எழுதுக.

(பத்தியை மீண்டும் எழுத வேண்டாம். நிறுத்தற்குறிகளைப் பிழையாக கருத வேண்டாம்)

தம் இல்லத்திற்கு வருகை புரிந்துள்ள விருந்தினருக்கு முதலில் உணவிட்டு, பின்பு தாமுண்டு மகிழ்வதை நம் முன்னோர் வழக்கமாக கொண்டிருந்தனர். விருந்தினர், மூத்தோர், பசு, பறவை, குழந்தைகள் ஆகியோருக்கு உணவளித்த பிறகே தாம் உணவு உண்டு மகிழும் கொள்கையைத் தமிழர்கள் கடைப்பிடித்தனர். விருந்தினருக்கு ஓர் வகை உணவும் தமக்கு அதனிலும் சிறந்த உணவையும் தரம் பிரித்துப் படைத்து உண்பது கூடாதென்று நம் மக்கள் கருதின. அதனாலேயே, ‘மருந்தே ஆயினும் விருந்தோடு உன்’ எனும் முதுமொழிக்கொப்ப விருந்தினரோடு அமர்ந்து உண்ணும் பழக்கத்தை கைக்கொண்டனர்.

[10 புள்ளி]

தேர்வுத்தாள் முடிவுற்றது

KERTAS PEPERIKSAAN TAMAT